Registered as a News Paper　　பக்கங்கள் 04　　விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02　　திருவள்ளுவர் ஆண்டு 2022　　மார்கழி 05　　(20 - 12 1991)　　வெள்ளிக்கிழமை　　ஓசை: 305

## சுன்னாகம் காவல்துறை பணிமனை நேற்று திறப்பு

தமிழீழ காவல்துறையின் சுன்னாகம் பணிமனை நேற்றுக்காலை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. காலை 7-00 மணியளவில் மேற்படி அலுவலகத்தை யாழ். மாவட்ட விசேட தளபதி திரு தமிழ்ச்செல்வன் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார். ஆரம்பத்தில் தமிழீழ தேசியக்கொடியை திரு: தமிழ்ச்செல்வன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து தமிழீழ காவல் துறையின் கொடியை காவல்துறைப் பொறுப்பாளர்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# பொருளாதார முற்றுகையால் யாழ்ப்பாண மக்கள் அவலம்

## அமைச்சரவை ஆராய வில்லை

வடக்குக் கிழக்கு தீர்விற்கு இ.தொ.கா. தலைவர் எஸ். தொண்டமானின் சமாதான யோசனைகளை மந்திரி சபை ஆராயவில்லை என அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மந்திரி சபையின் முடிவுகளை அறிவிப்பதற்காக பாராளுமன்றக் குழு அறையில் நடந்த நிருபர்கள் மாநாட்டில் ரணில் விக்கிரமசிங்கா இதனைத் தெரிவித்தார்.

## எறிகணை வீச்சு

சிறிலங்கா இராணுவம் நேற்று காலை பத்து மணி முதல் கட்டுவன் பகுதியிலிருந்து தொடர்ச்சியான செல் தாக்குதலை நடத்தியது.

நண்பகல் 12.00வரை நடைபெற்ற இத்தாக்குதலின் போது ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை. (ச)

## சோவியத் அமைச்சுகள் கலைப்பு

சோவியத்யூனியனின் உள்நாட்டு நிர்வாகம் மற்றும் காவல்துறைகளை நிர்வகித்து வந்த உள்துறை அமைச்சும், வெளிநாடுகளிலுள்ள தூதவராலயங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து வந்த வெளிவிவகார அமைச்சும் நேற்று முதல் கலைக்கப்பட்டிருப்பதாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

தேசிய கல்வி நிறுவனத்தால்

## 486 பட்டதாரி ஆசிரியர் டிப்புளோமா அனுமதி

(யாழ்ப்பாணம்)

தேசியகல்வி நிறுவனம் மகரகம - யாழ்ப்பாணக் கல்வித் திணைக்கள முகாமைத்துவ நிலையத்தின் அனுசரணையுடன் நடாத்தும் பட்டப்பின் கல்வி டிப்புளோமா கற்கைநெறிக்கு ஐந்து மாவட்டங்களிலிருந்து 486 பட்டதாரி ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி பயிற்சி மூலம் டிப்புளோமா பட்டம் பெறுவதற்காக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் இருந்து விண்ணப்பித்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புக் காரணம்; போக்குவரத்துத் தடை

(கொழும்பு)

'சார்க்' உச்சி மாநாட்டை ஒட்டி பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக கொழும்பில் சில இடங்களில் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டிருக்கும் என கொழும்புப் பொலிசார் அறிவித்துள்ளனர்.

வரும் 21 ஆந் திகதி முதல் ஜனவரி 5 ஆந் திகதி வரை கொழும்பில் சில பகுதிகளில் வாகனப் போக்குவரத்து தற்காலிக தடைகள் ஏற்படும்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சார்க் தலைவர்கள் இன்று கொழும்பு வருவர்

கொழும்பில் நாளை நடைபெறும் சார்க் உச்சி மாநாட்டில் பங்குபற்றுவதற்காக சார்க் நாடுகளின் தலைவர்கள் இன்று பிற்பகல் கொழும்பு வரத் தொடங்குவார்கள்.

மாக கொழும்பு கொண்டு வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காவநிலை மற்றும் வேறு அவசர காரணங்களால் இவர்களை வீதி மார்க்கமாகவும்

## தென்னிலங்கைபத்திரிகையாளரிடம் நல்லெண்ண தூதுக்குழு விளக்கம்

(கொழும்பு)

அரசாங்கம் மேற்கொண்டுள்ள பொருளாதாரத் தடையின் காரணமாக யாழ்ப்பாண மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளதாகவும் அத்தியாவசியப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும், போக்குவரத்து சீரழிந்துள்ளதாகவும், பெருமளவில் மக்கள் தொழில்களை இழந்து அல்லல்படுவதாகவும், அண்மையில் வடபகுதிக்கு சென்று திரும்பிய மெதடிஸ்ததிருச்சபை நல்லெண்ணக் குழுவினர் கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் நான்கு நாட்கள் பயணத்தை மேற்கொண்டு கொழும்பு திரும்பிய இக்குழுவின் தலைவரான வண. சோமாபெரேரா திருச்சபைத் தலைவர்கள், ஆஸ்பத்திரி அதிகாரிகள் மற்றும் புலிகளின் தலைவர்களையும் சந்தித்துப் பேசியதாகத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உணவுப் பற்றாக்குறை, போக்குவரத்து எரிபொருள் இல்லாமை, வாழ்க்கைச் செலவினங்கள் அதிகரிப்பு, வேலையில்லாத் திண்டாட்டம், மருந்து வகைகள் தட்டுப்பாடு ஆகியன நிலவுவதாக தெரிவித்தார்.

அத்துடன் குழந்தைகளுக்கான பால்மா விநியோகம் சீராக நடைபெறாததால் போஷாக்கின்மையும் சில சமயங்களில் பசி பட்டினியும் நிலவுகிறது. மின்சாரம் இல்லாததால் வீடுகளிலும் மற்றும் வாடகை வாகனங்களுக்கும் மண்ணெண்ணெய் உபயோகிக்கப்படுகிறது

மீன்பிடித் தொழிலும், வேளாண்மையும் நடைபெறாததால் கமக்காரரும் மீனவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் குறிபார்த்துச் சூடு; எட்டு இராணுவம் பலி

இடைக்காடு - பத்தமேனி பகுதிகளில் நேற்று எட்டு இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குப் பலியாகினர்.

பத்தமேனி பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மீது நேற்றுக் காலை 9-45 மணியளவில் விடுதலைப் புலிகள் குறிபார்த்துச் சுட்டதில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

விடுதலைப்புலிகள் குறிபார்த்துச் சுட்டதில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மீண்டும் ஒரு மணியளவில் பத்தமேனி பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் மீது விடுதலைப்புலி

## மண்ணெய் விலை

தேசிய கல்வி நிறுவனத்தால்

## 486 பட்டதாரி ஆசிரியர் டிப்புளோமா அனுமதி

(யாழ்ப்பாணம்)

தேசியகல்வி நிறுவனம் மகர கம - யாழ்ப்பாணக் கல்வித் திணைக்கள முகாமைத்துவ நிலையத்தின் அனுசரணையுடன் நடாத்தும் பட்டப்பின் கல்வி டிப்புளோமா கற்கை நெறிக்கு ஐந்து மாவட்டங்களிலிருந்து 486 பட்டதாரி ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி பயிற்சி மூலம் டிப்புளோமா பட்டம் பெறுவதற்காக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் இருந்து விண்ணப்பித்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புக் காரணம்; போக்குவரத்துத் தடை

(கொழும்பு)

'சார்க்' உச்சி மாநாட்டை ஒட்டி பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக கொழும்பில் சில இடங்களில் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டிருக்கும் என கொழும்புப் பொலிசார் அறிவித்துள்ளனர்.

வரும் 21 ஆம் திகதி முதல் ஜனவரி 5 ஆம் திகதிவரை கொழும்பில் சில பகுதிகளில் வாகனப் போக்குவரத்து தற்காலிக தடைகள் ஏற்படும்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சார்க் தலைவர்கள் இன்று கொழும்பு வருவர்

கொழும்பில் நாளை நடைபெறும் சார்க் உச்சி மாநாட்டில் பங்குபற்றுவதற்காக சார்க் நாடுகளின் தலைவர்கள் இன்று பிற்பகல் கொழும்பு வரத் தொடங்குவார்கள்.

சார்க் தலைவர்களைக் கட்டுநாயக்கா விமானநிலையத்திலிருந்து விமான மார்க்கமாக கொழும்பு கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காலநிலை மற்றும் வேறு அவசர காரணங்களால் இவர்களை வீதி மார்க்கமாகவும் அழைத்து வரக்கூடும் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய — சிறிலங்கா

## இரு தரப்பு விவகாரம் சனியன்று பேசப்படும்

சிறிலங்கா - இந்திய இரு தரப்பு உறவுகள் தொடர்பாக சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவும், இந்தியப்பிரதமர் பி.வி. நரசிம்மராவும் நாளை சனிக்கிழமை கொழும்பில் பேச்சுவார்த்தை நடாத்துவார்கள் என ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

'சார்க்' உச்சிமாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் இப்பேச்சுவார்த்தையும் இடம்பெற்றுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஐ.நா. அகதிகள் விடயத்தில் பங்கேற்க அனுமதிக்கவும்

### சிறிலங்கா இந்தியாவிடம் கோரிக்கை

(சென்னை)

இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கையில் மீளக்குடியமர்த்தும் விடயத்தில் ஐ.நாவின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் பங்கேற்க இந்தியா அனுமதிக்க வேண்டுமென இலங்கை அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கை அரசின் மறுவாழ்வுத்துறை அமைச்சர் பி. தயாரத்ன இத்திட்டத்தை நேற்று அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்தார். இது தொடர்பாக இந்தியாவுடன் பேச்சு

(3 ஆம் பக்கம் பார்க்க)

# தென்னிலங்கைபத்திரிகையாளரிடம் நல்லெண்ண தூதுக்குழு விளக்கம்

(கொழும்பு)

அரசாங்கம் மேற்கொண்டுள்ள பொருளாதாரத் தடையின் காரணமாக யாழ்ப்பாண மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளதாகவும் அத்தியாவசியப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும், போக்குவரத்து சீரழிந்துள்ளதாகவும், பெருமளவில் மக்கள் தொழில்களை இழந்து அல்லல்படுவதாகவும், அண்மையில் வடபகுதிக்கு சென்று திரும்பிய மெதடிஸ்ததிருச்சபை நல்லெண்ணக் குழுவினர் கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் நான்கு நாட்கள் பயணத்தை மேற்கொண்டு கொழும்பு திரும்பிய இக்குழுவின் தலைவரான வண. சோமாபெரேரா திருச்சபைத் தலைவர்கள், ஆஸ்பத்திரி அதிகாரிகள் மற்றும் புலிகளின் தலைவர்களையும் சந்தித்துப் பேசியதாகத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உணவுப் பற்றாக்குறை, போக்குவரத்து எரிபொருள் இல்லாமை, வாழ்க்கைச் செலவினங்கள் அதிகரிப்பு, வேலையில்லாத் திண்டாட்டம், மருந்து வகைகள் தட்டுப்பாடு ஆகியன நிலவுவதாக தெரிவித்தார்.

அத்துடன் குழந்தைகளுக்கான சமபோஷ விநியோகம் சீராக நடைபெறாததால் போஷாக்கின்மையும் சில சமயங்களில் பசி பட்டினியும் நிலவுகிறது. மின்சாரம் இல்லாததால் வீடுகளிலும் மற்றும் வாடகை வாகனங்களுக்கும் மண்ணெண்ணெய் உபயோகிக்கப்படுகிறது.

மீன்பிடித் தொழிலும், வேளாண்மையும் நடைபெறாததால் கமக்காரரும் மீனவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணை வீச்சு

சிறிலங்கா இராணுவம் நேற்று காலை பத்து மணி முதல் சுட்டுவன் பகுதியிலிருந்து தொடர்ச்சியான செல் தாக்குதலை நடத்தியது.

நண்பகல் 12.00வரை நடைபெற்ற இத் தாக்குதலின் போது ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை. (ச)

## சோவியத் அமைச்சுகள் கலைப்பு

சோவியத் யூனியனின் உள்நாட்டு நிர்வாகம் மற்றும் காவல்துறைகளை நிர்வகித்து வந்த உள்துறை அமைச்சும், வெளிநாடுகளிலுள்ள தூதுவராலயங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து வந்த வெளிவிவகார அமைச்சும் நேற்று முதல் கலைக்கப்பட்டிருப்பதாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

# புலிகள் குறிபார்த்துச் சூடு; எட்டு இராணுவம் பலி

இடைக்காடு - பத்தமேனி பகுதிகளில் நேற்று எட்டு இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குப் பலியாகினர்.

பத்தமேனி பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மீது நேற்றுக் காலை 9-45 மணியளவில் விடுதலைப் புலிகள் குறிபார்த்துச் சுட்டதில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இடைக்காட்டுப் பகுதியில்நேற்றுக் காலை 11-45 மணியளவில் இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் குறிபார்த்துச் சுட்டதில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மீண்டும் ஒரு மணியளவில் பத்தமேனி பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் குறிபார்த்துச் சுட்டதில் இராணுவத்தினரில் ஒருவர் கொல்லப்பட்டார்.

## மண்ணெண்ணெய் விலை லீற். 38 ஆக நிர்ணயம்

(நமது நிருபர்)

யாழ் மாவட்டத்தில் மண்ணெண்ணையின் ஆகக்கூடிய விலை லீற்றர் 38 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை யாழ் மாவட்ட மண்ணெண்ணை விநியோகத்தர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

யாழ் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற

(3 ஆம் பக்கம் பார்க்க)

## கடும்மழை காரணமாக 1,50,000 மக்கள் பாதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மலையகம், ஆகிய பகுதிகளில் கடந்த சில தினங்களாக பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 1,50,000 க்கும் அதிகமான மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர்.

மட்டக்களப்பில் மட்டும் மொத்தம் 30 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 5,000 மக்கள் இடம் பெயர்ந்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ஹைலண்ட் பால்மா பைக்கெட்டுகளில் புழுக்கள்

(யாழ்ப்பாணம்)

ஹைலண்ட் 400 கிராம் முழு ஆடைப்பால் மாவில் புழுக்கள் நெளிவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உடைந்த ஹைலண்ட் பால் பைக்கெட் ஸ்டேப்பிளர் கம்பிகளால் இணைத்துச் சில கூட்டுறவுக் கடைகளில் விற்பனையாகின்றன. இந்தப் பைக்கெட்டுகளிலேயே புழு இருப்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் மோதல்; போராளி ஒருவர் வீரச்சாவு

(வவுனியா)

வவுனியா மாவட்டம் பேயடி கூழாங்குளம் பகுதியில் நிலை கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினமிரவு ஏழுமணியளவில் வெளியேறி வந்தபோது இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்குதலை நடத்தினர். இத் தாக்குதலையடுத்து இராணுவத்தினர் முகாமிற்கு திரும்பினர். இத்தாக்குதலில் விடுத

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தைநிறுத்துவதாயின் வெற்றிபெறுவது அவசியம்

-டி.பி.விஜயதுங்கா

யுத்தம் முடிவடைந்ததும் அவசரகாலச்சட்டம் நீக்கப்படும். ஆனால் அது நடைபெறவேண்டுமானால் நாம் யுத்தத்தில் வெற்றி காண வேண்டும். இவ்வாறு நேற்று பாராளுமன்றத்தில் அவசர

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுத விநியோகத்திற்கு தகுந்த ஆதாரமுள்ளது

-லலித்

பிரேமதாசா விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கினார் என்ற குற்றச் சாட்டிற்கு தகுந்த ஆதாரம் இருப்பதாக லலித் அத்துலத்முதலி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**ஆண்டு 8 — ஆண்டு 11**

கணித ஆசிரிய, ஆலோசக, பட்டதாரி, பயிற்றப்பட்ட, யாழ்நகரின் பிரபல கல்லூரி ஆசிரியர்களால் கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி வகுப்புக்கள் ஆரம்பம் 1992 01.01, இடம். 42/6 யாழ் இந்துக்கல்லூரி ஒழுங்கை. (சிவகுருநாதர் ஒழுங்கை) மாதமொரு பரீட்சை; வகுப்பொன்றிக்கு 32 மாணவர்கள், தேர்ச்சி அறிக்கையுடன் வரவும். (R/2019)

### "மில்க்வைற் திரவ சவர்க்காரம்"

மில்க்வைற் திரவ சவர்க்காரம் சிக்கனமானது. அரிக்காமல் செலவற்று அழுக்கை அகற்றிப் பளிச்சிடும் வெண்மை தருகிறது. லேபலுடன் கூடிய வெற்றுப்போத்தல் தந்து விலையில் ரூ. 2/- கழிவு பெறுங்கள். விலை ரூபா. 50/- (B/3647)

## வேலணை ஆசிரியர்களுக்கு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வேலணைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த கொத்தணி அதிபர்கள், ஆசிரியர்கள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு யா/மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள கூட்டத்திற்குத் தவறாது சமூகம் தருமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புலேந்திரன் கேட்டுக்கொள்கின்றார்.

### தவறிவிட்டது

மணியிலிருந்து கொடிகாம வீதியால் நெல்லியடிக்குச் செல்லும் பாதையில் ஓட்டோ ரயர் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். பிரயாணச் செலவும், தகுந்தசன்மானமும் வழங்கப்படும். (R/2021)

## 6வது ஆண்டு நினைவுநாள்

தாயின் மடியில்
05 - 07 - 1964



தாயக மண்ணின் மடியில்
20 - 12 - 1985

### வீரவேங்கை கார்த்திக்
### (இ. உதயகுமார்) கோண்டாவில்

தமிழர் நிலை கண்டு நீயும்
"தம்பி" வழி சென்றாய்
அவல நிலை போக்கிடவே
ஆயுதம் ஏந்தினாய்
அரியாலையிலே எதிரிப்படையுடனே
எதிர் நின்று சமர் செய்தாய்
ஆண்டுகள் ஆறு ஆகிய போதும்
அழியாது எம நெஞ்சில் நிறைந்துள்ளாய்
விடுதலை தேடிய வேங்கையே கார்த்திக்
விடியல் காணும் முன் விதையாகிப் போனாயே
பலி வீரர் உன் வழியில் தடம் பதித்தே
வீரப் போர் புரிகின்றார் - தமிழீழம் காணவே
போற்றிடுவோம் உன் புகழ்தனை
தமிழீழமதில்
வாழ்க உன்புகழ். மலர்க சுதந்திர தமிழீழம்!

உதயகுமார் வீதி,
கோண்டாவில்.
(B/3658)

பெற்றோர், சகோதரர்கள்
மைத்துனர்மார், நண்பர்கள்
உற்றார், உறவினர்.

## 90-ம் நாள் நினைவஞ்சலி

சங்கானை பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம் (வ.உ)

## கணக்குப்பதிவாளர் தரம் 1

# பதவி வெற்றிடம்

மேற்காட்டிய பதவிக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**தகைமைகள்:-**

அ) கூட்டுறவுச் சேவையாளரின் 10ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்கு லிகிதர் பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சேவையாளரின் 11ஆவது சம்பளத்திட்டத்தில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்;

அல்லது

ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கில் சம்பந்தமான துறையிலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம்,

அல்லது

இ) கூட்டுறவுச் சேவையாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) / க. பொ. த. (உயர்தரம்)இல் கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்ட மூன்று பாடங்களிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் துறையிலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

**வயதெல்லை:-**

21 — 40 வரை (கூட்டுறவுச் சங்கத்தில் வேலை செய்வோருக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது)

**சம்பளத்திட்டம்:-**

301/09 905 - 1605
40X5 - 50X10

இத்துடன் கூட்டுறவு ஆணைக்குழுவின் சுற்று நிருபத்திற்கு அமையச் சகல படிகளும் வழங்கப்படும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 5-1-92 அன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக் கூடியதாக "தலைவர், சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், சங்கானை" என்ற விலாசத்திற்குப் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பப்படல் வேண்டும்.

17-12-91
(B-3661)

தலைவர்
சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்,
சங்கானை.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 14-10-1958
உதிர்வு 23-12-1988

## பாரதி
கல்வி நிலையம்,
சித்தன்கேணி.

# A/L 93

ஆரம்பம்: 23-12-91
3.00 மணி

பொருளியல் -மகேந்திரன்
கணக்கியல் - யோகராஜா
அளவையியல் - சயந்தன்
வர்த். நிதியும்-ஜெனதாஸ் (கில்)
இ நாகரிகம்-அருள்நங்கை
தமிழ் - பாலா
அரசியல் - கியூபேட்
A/L 92 - பகுதி II
A/L 91 - வினாவிடை
நடைபெறுகின்றன
(B/3662)

## புதிய உயர் கல்லூரி
## NEW COLLEGE OF HIGH STUDIES

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

**O/L ஆண்டு 10, 9**

புதிய வகுப்புக்கள்
ஆரம்பமாகிவிட்டன
விஞ்ஞானம்:-
இரா. செல்வவடிவேல்
கணிதம்:- கதிர்
தமிழ்:- ரவி
சமூகக்கல்வி:- ராஜன்
ஆங்கிலம்:- கிரிசாந், சிவலிங்கம்
வர்த்தகம்:- மகேன்
(/3651)

# நினைவு கூருகின்றோம்...

## 1991 - 12 - 20

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் அரியாலைப்பகுதியில் எமது முகாம் ஒன்றைச் சிறீலங்காப் படையினர் சுற்றி வளைத்தபோது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய
**கார்த்திக்** (சம்பு இராசப்பு உதயகுமார் - உதயகுமார்வீதி, கோண்டாவில் மேற்கு)

1986ஆம் ஆண்டு வேலணையில் சிறீலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய
**வல்லி** (பொன்னுத்துரை சந்திரகுமார் - குமரகோட்டம், கோண்டாவில் மேற்கு)

1987ஆம் ஆண்டு அச்செழுவில் இந்தியப் படையினருடனான மோதலின் போது காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய
**சகிலா** (ரஜனி நவரட்ணம் - பெற்றா வீதி, மன்னார்)

ஊரெழுவில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் வீரச்சாவெய்திய
**தாஸ்** (சின்னராசா சதீஸ்வரன் - வைரவோடை, ஏழாலை மேற்கு)
**லோகேந்திரன்** (ஐயாத்துரை லோகேந்திரன் - அச்செழு)
**ரவி** (சுப்பிரமணியம் தவேந்திரன் - ஏழாலை மேற்கு)
**சந்திரன்** (துரைராஜா சண்முகரத்தினம். வண்டத்திருப்பு)
**பவான்** (மன்னார்)
**குண்டுத்தம்பி** (மகாலிங்கம் நாகேஸ்வரன் - 7-மகட்டை, மல்லாகம் தெற்கு)
**ஆனந்தன்** (கனகநாதன் முரளி - 639, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்)
**ஜோன்சன்**
**சந்திரன்**

தாயின் மடியில்

05 - 07 - 1964



தாயக மண்ணின் மடியில்

20 - 12 - 1985

## வீரவேங்கை கார்த்திக்

### (இ. உதயகுமார்) கோண்டாவில்

தமிழர் நிலை கண்டு நீயும்
''தம்பி'' வழி சென்றாய்
அவல நிலை போக்கிடவே
ஆயுதம் ஏந்தினாய்
அரியாலையிலே எதிரிப்படையுடனே
எதிர் நின்று சமர் செய்தாய்
ஆண்டுகள் ஆறு ஆகிய போதும்
அழியாது எம நெஞ்சில் நிறைந்துள்ளாய்
விடுதலை தேடிய வேங்கையே கார்த்திக்
விடியல் காணும் முன் விதையாகிப் போனாயே
பலி வீரர் உன் வழியில் நடை பதித்தே
வீர போர் புரிகின்றார் - தமிழீழம் காணவே
போற்றிடுவோம் உன் புகழ்தனை
தமிழீழமதில்
வாழ்க உன்புகழ். மலர்க சுதந்திர தமிழீழம்!

உதயகுமார் வீதி,
கோண்டாவில்.

பெற்றோர், சகோதரர்கள்
மைத்துனர்மார், நண்பர்கள்
உற்றார், உறவினர்.

(B/3658)

---

வயதெல்லை:-
21 — 40 வரை (கூட்டுறவுச் சங்கத்தில் வேலை செய்வோருக்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது)

சம்பளத்திட்டம்:-
301/09 905 - 1605
------------------------
40X5 - 50X10

இத்துடன் கூட்டுறவு ஆணைக்குழுவின் சுற்று நிருபத்திற்கு அமையச் சகல படிகளும் வழங்கப்படும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 5-1-92 அன்றோ அல்லது அதற்கு முன்பு கிடைக்கக் கூடியதாக ''தலைவர், சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், சங்கானை'' என்ற விலாசத்திற்குப் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பப்படல் வேண்டும்.

தலைவர்
சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்,
சங்கானை.

17-12-91
(B-3661)

---

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 14-10-1958
உதிர்வு 23-12-1988

## தியாகி
## தம்பையா இருகுலசிங்கம்

எமது ஈழமதில் குல பதியோன் உதித்தவனே!
குணமிக்க பெருமையுடையான் புகழுடையான் ஆகினாய்
தமிழீழத்தின் வீரருக்கே துணை நின்றாய் நீ என்றே
கயவன் உருவினிலே கயவர் உயிர் கொய்தனரோ?

வேதனையின் சூழலிலே மாற்றிவிட்டாய் இருகுலனே
ஆறாத தீராதையா அன்பு நெஞ்சம் கொண்டவர்க்கு
தங்கமாய் வளர்த்து விட்ட தாயவள் தான் கதற
சிங்கமாய் மறைந்துவிட்டாய் சங்குவேலி மண்தனிலே!

ஆண்டுகள் பலவும் அருண்டோடி மறைந்தாலும்
நீண்டிடும் உன் நினைவாழ்வு என நம்பியிருந்தோம்
மீண்டிடும் தாயகம் என மலர்ந்த உன் நெஞ்சில்
கண்டபடி கணை தொடுத்தான் தமிழ்த் தேசத்
துரோகியவன்

மறைந்து விட்டாய் நீ ஒரு நாள் என்று நாம்
நினைக்கவில்லை
நிறைந்து விட்டாய் எங்கள் நெஞ்சினிலே நெடு
நாளாய்
துறந்து விட்டாய் உன் உயிரை துச்சமாக
மண்ணுக்கே
மலர்ந்திடுவாய் மாவீரர் மாலைகொள்ளும்
செடியினிலே!

ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றேன்

உன் பிரிவால் வாடும்
உன் அம்மா மகேஸ்வரி

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

(B/3657)

---

# 90-ம் நாள் நினைவஞ்சலி



வீரஜனனம்
14-01-1972

வீரமரணம்
15-09-1991

## லெப். வில்லியம்
## இராஜகோபால் விவேகானந்தன்

ஓ ... ... ... ... ... ...
வில்லியமே போராடுவதற்காக
ஒரு இலட்சியத்தை மனத்தில் வீரன் ஒருவன்
பெற்றுவிட்டால் அவன்
எதையும் சமாளிக்கும் ஆற்றலை
பெற்றுவிடுகின்றான் ஆனால் — நீ
''சா'' அவனியில் சரித்திரம் படைத்து
சக தோழருக்கும் பணம் ஆற்றில்
உணர்விலும் மனத்திலும்
மண்ணின் பற்றினை காட்டினாய் — தோழா
நீ மடியவில்லை வரப் போகும்
தமிழ் ஈழத்திற்காய் மலர்ந்து
மணம் பரப்பிக் கொண்டிருக்கும்
''வாடாத நித்தியப் பூக்கள்''

— நண்பர்கள்

கிளிவெட்டி,
மூதூர்.

(B/3659)

---

# 1991 - 12 - 20

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் அரியாலைப்பகுதியில் எமது முகாம் ஒன்றைச் சிறிலங்காப் படையினர் சுற்றி வளைத்தபோது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய
**கார்த்திக்** (சம்பு இராசப்பு உதயகுமார் - உதயகுமார்வீதி, கோண்டாவில் மேற்கு)

1986ஆம் ஆண்டு வேலணையில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய
**வல்லி** (பொன்னுத்துரை சந்திரகுமார் - குமரகோட்டம், கோண்டாவில் மேற்கு)

1987ஆம் ஆண்டு அச்செழுவில் இந்தியப் படையினருடனான மோதலின் போது காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய
**சகிலா** (றஜனி நவரட்ணம் - பெற்றா வீதி, மன்னார்)

ஊரெழுவில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் வீரச்சாவெய்திய
**தாஸ்** (சின்னராசா சதீஸ்வரன் - கலைவேலோடை, ஏழாலை மேற்கு)
**லோகேந்திரன்** (ஐயாத்துரை லோகேந்திரன் - அச்செழு)
**ரவி** (சுப்பிரமணியம் தவேந்திரன் - ஏழாலை மேற்கு)
**சந்திரன்** (துரைராஜா சண்முகரத்தினம். பண்டத்தரிப்பு)
**பவான்** (மன்னார்)
**குண்டுத்தம்பி** (மகாலிங்கம் நாகேஸ்வரன் - 7-மட்டை, மல்லாகம் தெற்கு)
**ஆனந்தன்** (உலகநாதன் முரளி - 639, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்)
**ஜோன்சன்**
**சந்திரன்**
**கப்டன் பாரதிமாஸ்ரர்** (சிவலிங்கம் ரவீந்திரன் - கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)
**மாவி** (சந்தசாமி யோகேஸ்வரன் - 52/14 இரும்பு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்)
**ரவி** (ரெக்ஸ் ராஜ்குமார் - 16/3, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்)

இதே சம்பவத்தின்போது இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 3 தமிழர்கள்

1988ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகளால் கைதுசெய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட
**கேசிகன்/குமார்** (குணரட்ணம் ஜெயக்குமார் - 6/1, மீனாட்சி அம்மன் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்)

மாங்குளத்தில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட அணுக்கோம் வீதியைச் சேர்ந்த இளம்பெண்

யாழ் கொலிகண்டியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3660)

## நீரிழிவுப் பரிசோதனை

நல்லூர் லயன்ஸ் கழகம் நாளை 21-12-91 சனிக்கிழமை காலை 8·30 மணிக்கு திருநெல்வேலி செங்குந்த இந்துக்கல்லூரியில் நீரிழிவுப் பரிசோதனையும், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் தகுந்த அதிகாரிகள்மூலம் அளிக்க இருக்கின்றார்கள். இனம் காணப்பட்ட நோயாளர்களுக்கு இலவசமாகக் குளிசைகள் வழங்கப்படும்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ள ஆர்வமுள்ள அனைவரையும் நல்லூர் லயன்ஸ் கழகத்தினர் அன்புடன் அழைக்கின்றார்கள்.

(B/3664)

## 90 ஆம் நாளில் தொடரும் நினைவலைகள்



**வீரவேங்கை மலேசியன்**

இராசேந்திரம் திவாகரன் (கரன்)

மண்டானில் : 27-12-1975 மணலாற்றில் : 23-09-1991

நெஞ்சமதில் நீங்காத இடம்
கொண்ட எம் மறவனேயுன்
பிஞ்சுமுகம் தோன்றுதடா
நெஞ்சமதை உருக்குதடா
மண்ணிலிருந்து உனை மாற்ற
எண்ணியவர் எண்ணமெல்லாம்
மண் தூவிச் சென்று நீயும்
மறவர் படை சேர்ந்தனையோ
மணலாற்றில் கால் பதித்த
பிணம் தேடும் கும்பலினை
பிணமாக்கிச் சென்ற வேளை
மணல் மீது சரிந்தனையோ
உன் பிரிவைப் பொறுப்போமா
உன் கனவை மறப்போமா
கொஞ்சு தமிழ் ஈழமதை
நெஞ்சமதில் கொண்ட உந்தன்
அஞ்சா வழி சென்றிடுவோம்
ஆத்மாவைத் தினம் துதிப்போம்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குறிப்பு ; 21-12-1991 சனியன்று அந்தியேட்டிக் கிரியை இவரது இல்லத்தில் நடைபெறும்.

மண்டான், உன் பிரிவால் துயருறும்
கரணவாய்மேற்கு, குடும்பத்தினர்,
கரவெட்டி. உறவினர், நண்பர்கள்

(B/3665)

## ஓராண்டு நினைவாக ...



அமரர்

**செல்லத்துரை - சிவபாதம்**

(தாசன் சவுண்ஸ்)

பிறப்பு 04-04-1931 இறப்பு 10-01-1991

திதி: 1991-12-20

"அன்புத் தெய்வமே, அப்பா!" தங்கள் நினைவுகள் என்றென்றும் எங்கள் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும்.

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

"கிரிதரவாசா" மனைவி, பிள்ளைகள்,
ஏழாலை மேற்கு, மருமக்கள், பேத்திகள்.
ஏழாலை.

(R/2018)

# அதிபரின் இடமாற்றத்திற்கு அபிவிரு.சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி தி. நாகராசாவை இடமாற்றம் செய்ய யாழ். கல்விப் பணிப்பாளரால் விடுக்கப்பட்ட இடமாற்றக்கட்டளை கல்லூரி அதிபரைப்பழிவாங்கும் நோக்குடனேயே மேற்கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கையானது அதிபரை மட்டுமல்லாது கல்லூரி மாணவிகளையும், பெற்றோர்களையும் அவமதித்துள்ளது என்பது கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தின் நிலைப்பாடாகும்.

இவ்வாறு யாழ். இந்து மகளிர் கல்லூரி அபிவிருத்திச் சங்கம் ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கல்லூரியின் அதிபராக மாற்றம் பெற்றுள்ள திருமதி எஸ். ஸ்கந்தராஜா முன்னிலையில் நிறைவேற்றப்பட்ட இத் தீர்மானத்தின் பிரதிகள் யாழ். கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் மற்றும் யாழ். கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. வேலாயுதம்பிள்ளை ஆகியோருக்கும் கையளிக்கப்பட்டன என்பதைக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் கா. குமாரவேளால் அனுப்பி வைக்கப்பட்ட இத் தீர்மானத்தின் வாசகத்தில், இன்றைய போர்க்கால சூழ்நிலையில் எமது பிரதேசத்தில் ஏனைய பாடசாலை அதிபர்கள் நடத்தி வருவதைப் போல எமது அதிபர் திருமதி தி. நாகராசா அவர்களும் சமூகத்தோடு இணைந்து செயலாற்றியுள்ளார் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் திருமதி தி. நாகராசா அவர்களின் இடமாற்றத்தை உடனடியாக நிறுத்தி அவரையே இந்து மகளிர் கல்லூரியின் நிரந்தர அதிபராக மீண்டும் நியமிக்கும் படி அத் தீர்மானம் கல்விப்பணிப்பாளரை வேண்டிக் கொள்கின்றது.

# வேலணை ஆசிரியர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வேலணைக் கோட்ட அதிபர், ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்று யாழ். மத்திய கல்லூரியில் இன்று காலை ஒன்பது மணிக்கு நடைபெறவுள்ளது.

அனைவரும் தவறாது பங்குகொள்ளுமாறு வேலணைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் சி. புலேந்திரன் கேட்டுக் கொள்கிறார்.

ஜெயலலிதா அரசாங்கம்

# மாடு வெட்டும் கத்தியால் மனிதரை வெட்டுகிறது

— கருணாநிதி

(சென்னை)

ஜெயலலிதா அரசாங்கம் மாடு வெட்டும் கத்தியால் மனிதர்களை வெட்டுகிறது என முன்னாள் தமிழக முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

இந்த ஆட்சியில் மிகவும் பிந்தங்கிய சமூகத்தைச் சேர்ந்த அதிகாரிகளும், ஹரிஜன சமூகத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் சிறையில் இருக்கவும், சிதையில் எரிக்கவும் பட வேண்டியவர்களான நிலை ஏற்பட்டிருக்கிறது எனவும் கருணாநிதி குறிப்பிட்டார். முன்னாள் டி ஐ. ஜி. துரை தற்கொலை செய்து கொண்டார் என நிலவும் வதந்திகள் பற்றி கருணாநிதியிடம் செய்தியாளர்கள் கேட்டபோது தன் மீதும் நடவடிக்கை எடுக்கப்படலாம் என்ற அச்சத்தினால் அவர் தற்கொலை செய்து கொண்டிருக்கக் கூடும் எனத் தெரிவித்தார்.

பொருளாதார
ரும் தொழில் இல்லாது உள்ளார்கள்.

வண. சோம பெரேரா மேலும் தெரிவிக்கையில் ஒரு அரசியல் தீர்வை முன்னெடுப்பதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளதாகப் புலிகள் தெரிவிக்கின்றார்கள் ஒரு போர் நிறுத்தத்துக்கு புலிகள் தயாராக இருக்கிறார்கள் பேச்சுவார்த்தைக்கும் புலிகள் தயாராகவுள்ளார்கள். ஆனால் பேச்சுவார்த்தைக்கான முனைப்புக்கள் இல்லாது போனால் தொடர்ந்து போராடவும் தயாராகவுள்ளார்கள் எனவும் வண. சோமபெரேரா தெரிவித்தார்

வவுனியாவில்
லை புலிகள் தரப்பில் குஞ்சன் (இன்னராசா, அருந்தவராசா. கூழாங்குளம்வவுனியா) என்பவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார். இவருக்கு புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

# இராஜினாமா கடிதத்தில் கொர்பி கைச்சாத்து

சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவ் தனது ராஜினாமாப் பிரகடனத்தில் கைச்சாத்திட்டுள்ளார் என மொஸ்கோ வானொலி அறிவித்துள்ளது.

ஆனால் நாளை சனிக்கிழமை அல்லது திங்கள் கிழமையே அந்தப் பிரகடனத்தில் திகதியிடுவார் என்றும் மொஸ்கோ வானொலி தனது செய்தியில் கூறியது.

கொர்பச்சேவ் தொலைக்காட்சி மூலம் உரையாற்றிய பின் பொதுநலவாய நாடுகளின் பொதுநல அமைப்பு அமைக்கும் பணி நிறைவேறியவுடன் பதவியிலிருந்து விலகப் போவ அறிவித்துள்ளார்


## 1992 ஆம் ஆண்டிற்கான மாணவர்களை சேர்த்தல் பற்றிய அறிவுறுத்தல்கள்

5, 6, 7, 8, 9, 10, 11 ஆம் ஆண்டுகளுக்கான

புதிய பிரிவுகள் யாவும் 05-01-1992 ஞாயிறு ஆரம்பமாகின்றன

ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான மாணவர்களை மட்டுமே அனுமதிக்க முடியுமாதலால் மாணவர்கள் தங்கள் அனுமதியை முன்கூட்டியே உறுதிசெய்து கொள்ளுதல் வேண்டும்.

மாணவர்கள் கீழ்க்குறிப்பிட்ட நேரத்திற்கு எமது நிறுவனத்திற்கு சமுகமளித்து தமது அனுமதியை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

| ஆண்டு | காலம் | நேரம் |
|---|---|---|
| 5 | 23-12-1991 | காலை 7-30 மணி |
| 6 | ,, | காலை 8-30 ,, |
| 7 | ,, | மு. ப. 9-30 ,, |
| 8 | ,, | ,, 10.30 ,, |
| 9 | ,, | ,, 11-30 ,, |
| 10 | ,, | பி. ப. 2-30 ,, |
| 11 | ,, | பி. ப. 3-30 ,, |

வகுப்புக்கள் யாவும் மாணவர்களின் வசதிக்கு ஏற்ப வெவ்வேறு பிரிவுகளாக நடாத்தப்படும். நேர சூசிகைகள் 23-12-91 அன்று வழங்கப்படும்.

க. பொ. த. உயர்தரம் 93 ஆம் ஆண்டிற்கான
கலை, வர்த்தக, விஞ்ஞான பிரிவுகள்

புதிய வகுப்புக்கள் யாவும் 21-12-91 (சனி) ஆரம்பமாகும்
கலை, வர்த்தகப் பிரிவு: 21-12-91 காலை 6-15 மணி
விஞ்ஞான பிரிவு: ,, பி. ப. 2-30
(கணிதம் உயிரியல்)

அதிபர்
யூனிவேர்சல்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(B/3663)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது